அக்டோபர்: 31

## பிள்ளைகளைப் போல நேசித்தேன்

### ஓசியா: 11 ம் அதிகாரம்

இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்: எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன். ஓசி11:1. அவர்கள் தங்களை அழைக்கிறவர்களின் முகத்துக்கு விலகிப் போய்விட்டார்கள்; பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டினார்கள். ஓசி11:2. நான் எப்பிராயீமைக் கைபிடித்து நடக்கப் பழக்கினேன்; ஆனாலும் நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற்போனார்கள். ஓசி11:3. மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன், அவர்கள் கழுத்துகளின் மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப் போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங் கொடுத்தேன். ஓசி 11:4. இவ்வசனங்களுக்கு பல விளக்கமுண்டு. பிள்ளைகளாகிய உங்களுக்கு தேவையானவற்றை படிக்கப்போகிறோம். பாவத்தில் வாழ்ந்த இஸ்ரவேலரை பிள்ளையாக நேசித்து அப்பாவத்திலிருந்து மீட்டுக்கொண்டேன். மீட்டுக்கொண்ட என்னை (இயேசப்பாவை) விட்டு விலகிப்போய். அந்நிய தெய்வங்களை வணங்குவதிலும், உலகக்காரியங்களிலும் ஈடுபட்டார்கள். அப்படியிருந்த பொழுதும் ஒருதகப்பன் கையைபிடித்து நடத்துவது போல் கைபிடித்து தாங்கி வழிநடத்தினார்.

### கேள்வி:
இளைஞரை மட்டுமா கர்த்தர் நேசிப்பார்?

### பதில்:
கர்த்தர் எல்லோரையும் ஒரே மாதிரியே நேசிப்பார். எகிப்திலிருந்து வரவழைத்தேன் என்றால். வாலிபரை மட்டும் வரவழைத்தார் என்று அர்த்தமல்ல. இளவயதினர் அதிக பாவம் செய்வதால். அவர்களை குறிப்பிட்டிருக்கலாம். தொடர்ந்து குணமாக்குகிறார், ஆகாரம் தருகிறார். வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் செய்கிறார். பிள்ளைகளாகிய நமக்கு காய்ச்சல் வந்துவிட்டால் அல்லது சரீரத்தில் எதாவது நோய் வந்துவிட்டால். நமது அம்மா இரவு தூங்காமல், இரவு பூரா கண் விழித்து நமது சரீரத்தை தொட்டு உஷ்ணம் இருக்கா என்று பார்ப்பார்கள். விக்ஸ் போன்ற பாம்களை பூசி விடுவார்கள். குடிப்பதற்கு ஊட்டச்சத்துள்ள ஆகரங்களை தருவார்கள் இல்லையா. இந்த தாயின் அன்பை காட்டில் பெரியது இயேசப்பாவின் அன்பு. எப்படி? 1. எங்களை குறித்து எந்த தாய் அக்கறைப்படுகிறாவோ அந்த தாயை குணமாக்குவதும் போஷிப்பதும் இயேசப்பா. 2. தாய், தந்தையர், நண்பர்கள், மனைவி, கணவன், உறவுகள் யாராயிருந்தாலும் என்னுடைய பாவத்துக்குரிய தண்டனைக்காக தன்னுயிரை தரமாட்டார்கள், இயேசப்பா மட்டுமே என்னுடைய பாவங்களுக்காக பாடுகள் அனுபவித்து சிலுவையில் மரித்தார். எனவே பிள்ளைகள் ஒன்றுக்குக்கும் கலங்காமல் அப்பா ஜீவனோடு இருக்கிறார் என்ற விசுவாசத்தோடு. அப்பாவுக்கு நன்றியுள்ள பிள்ளைகளாய் வாழுவோம்.

உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். **லூக்கா 12:7**

ஜெபம்

எங்களை நேசிக்கும் பரலோக தகப்பனே. பிள்ளைகளாய் எங்களை நேசிப்பதற்கு நன்றியப்பா. இயேசப்பாவுக்கு இருக்கும் அளவற்ற அன்பு இரக்கம் மன்னிப்பு போன்ற குணாதிசயங்கள் உள்ள பிள்ளைகளாயிருக்க உதவிடுங்க. ஆமென்